உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதருஸ், என், சி.

உ

கலியுகச்சிந்து.

—(*)—

நாதநாமக்கிரியை-பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக் கேளாய்

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே ()

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோயேழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கினகடனேதான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள் - ஆடிஆவணிகூட
பொளக்குதே வெய்யல்
நாட்டுப்புரங்களெல்லாம் ஒட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பரக்குது
காடுமோடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சி (கால)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி பில்லுக்கலையலாச்சி
தரையும்உரைந்துபோச்சி தண்ணிப்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சி - தாய்தமக்கைபோலே
பெண்தேட லாச்சி

கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் கார்த்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலிஷுக்கு நல்லபிழைப்பாச்சி (கால)
காட்டில்மழையாச்சி கழணிவுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலே யிரப்பில்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்பொரிஞ்சிபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி

மண்மாரியாச்சி - நாட்டுப்புரங்களெல்லாம்
மண்மாரி யாச்சி

யிருந்தவிரைகளெல்லாம் யேனோவிரைத்தமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுயெடுவாயிதா பிடிபிடி ஆளென்று
எழெட்டுபேராக வீட்டைவளைத்துக்கொண்டு

ஜப்திகளாச்சி - ஆடுமாடுகளெல்லாம்
யேலமாய் போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால் தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது

வேடிக்கையாச்சி - தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி

களிதின்றுபிழைக்கவும் கேவுறுமொறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது

கூலிக்கிப்போனலும் லஞ்சங்கள்கேழ்க்குது
குடுத்தாலும்நாலானுள் அடித்துத்துரத்துது(கால)
சீமைசிட்டிகளெல்லாம் சிரிப்பாய்சிரிச்சிபோச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்ருய்ப்போச்சி
பொருமையாய்பிழைத்தவர் பொழப்புக்குயிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி - சருவகுலங்களும்
நடைதப்பிப் போச்சி

அந்தணர்குலத்துடன் ஆகாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேல்தூங்குது
பணமென்ருல்பிணங்கூட வாய்கொஞ்சந்திரக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்கிதொங்குது (கால)
தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பிதமையன்பெண்டை தெம்பாயிருக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகன்ஒப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுபோச்சி - பணமேபெருமையாச்சி
ஜாதிகள் போச்சி
பலத்தஉத்தியோகத்தை பார்க்கபனைவியாச்சி
படுத்துயிருக்கும்போது அடுத்துப்புணரலாச்சி
கலங்கிவேசியரெல்லாங் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி - தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி

பூமியில்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம் அடித்துமபங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குசீச்சீ (கால)
கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோட்டைக்காட்டலாச்சி
கொஞ்சம்யேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சி - பெரியோர்சிறியோரென்ற
அளவெல்லாம் போச்சி
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி
அப்பன்யேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுப்பிள்ளைகள்பெற்று முறித்துயெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொன்றாச்சி
கட்டிகொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுனாள் பெத்துமுரிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுபோச்சி
மாதாபிதாபேச்சி தலையைக்குனியலாச்சி
அதிகமாய்போச்சி - குடிசெட்டிமுண்டைகள்
அணியணியாச்சி யிப்போ
பெண்கள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பிணத்திதிரியலாச்சி
சண்டைசாடிக்கெல்லாம் பணத்தையிரைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் பூமியில்மருந்தாச்சி (கால)

பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்ப்பரந்துபோச்சி
பரச்சிக்குப்பணந்தந்து சிரப்பாய்கடக்கலாச்சி
அஞ்சாமல்பரசோத்தில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி - அந்தணருலேயே
குடிகெட்டுப்போச்சி
துரைக்குபுரந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
ஜோடும்செருப்பும்போச்சி பூட்சுணுக்கலாச்சி
அடுப்புங்கரையில்கூட யிங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி (கா)
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
ஜாதித்தமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புக்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் கையில்யிரச்சலாச்சி
வேதங்கள்போச்சி - கிறிஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சி
கோவில்குளங்களெல்லாங் குட்டிச்சுவராய்போச்சி
குடியாதிகமாச்சி கடைகள்பெருத்துபோச்சி
கிருமதேவிகளெல்லாம் கடையாய்ப்பரந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி
கலியுகநடத்தைக்குக் கடவுளுஞ்சிரிக்குது
காலத்துக்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாய்ச்சலில்பாதி கூண்டோடேசாய்க்குது
குனிந்துயெழுந்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியில்பாதி - யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதேகூவி ஐயோ
யின்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
யேனோகெருவங்கொண்டு வீணுகமடியுது
யெண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாவுது (கால)
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேல் புலிபோலத்துள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சிபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே - நிலையில்லாகழுதேநீ
கெட்டுப்போகாதே
ஊததஉடலைநம்பி ஓதிபோலேங்களாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகச்சொல்லாதே (கால)

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம்
பண்ணினநன்றி மறக்குங்காலம் பழி
பாவத்துக்கஞ்சாக் கலிகாலம். 1

புருஷனைப்பெண்டீர் வுதைக்குங்காலம் பெற்ற
பெண்ணைத்தகப்பன் புணருங்காலம்

தருமநெறியை மரக்குங்காலம் கெட்ட
தருதலைக்கேத்தக் கலிகாலம். 2
தங்கையை அண்ணன் புணருங்காலம் ஐயா
தாயைப்பொலிந்து மடிந்தகாலம்
மங்கைக்குமஞ்ச ளரைக்குங்காலம் ஐயா
மானமில்லாத கலிகாலம். 3
கொண்டபுருடனைத் திட்டுங்காலம் இவள்
கூலிகொடுத்துப் புணருங்காலம்
முண்டைகள்பிள்ளை பெருகுங்காலம் ஐயா
மோசத்துக்கஞ்சாக் கலிகாலம். 4
கட்டினமாது அலையுங்காலம் யிவன்
காவியுடுத்தித் திரியுங்காலம்
புட்டிபுட்டியாய்க் குடிக்குங்காலம் ஐயா
புளுகருக்கேத்தக் கலிகாலம். 5
பொய்யானபத்திர மெழுதுங்காலம் சாட்சி
பூட்டியேகோட்டில் கெலிக்குங்காலம்
தெய்வப்பொருளைத் திருடுங்காலம் இது
தீவினைக்கஞ்சாக் கலிகாலம் 6.
அருமையரியா முரட்டுக்காலம் யிது
கர்மியைப்போற்றுந் திருட்டுக்காலம்
சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம்
சோதித்துப்பார்கலி காலகுணம்.

கலியுகச்சிந்து - முற்றுப்பெற்றது.